**கவனிக்க.-** *2009.02.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I (IIஅ) மற்றும் பகுதி (IIஅ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1590 - 2009 පෙබරවාරි 20 වැනි සිකුරාදා - 2009.02.20

*1590 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 210 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 212 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, பெப்ருவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 விதிகளின் கீழே குறிப்பிடப்பட்ட கம்பனி 11.12.2008 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது :

கம்பனியின் பெயர் : விச்சி கம்பனி (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 66470
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 107, UDA கைத்தொழில் பேட்டை, கட்டுவான, ஹோமாகம

என். ஹேவா கன்டம்பி,
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,
கம்பனிச் செயலாளர்.

2-406

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற் கிணங்க ஒரு கம்பனி கீழ் குறிப்பிடப்படும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவுசெய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கின்றது :

கம்பனியின் பெயர் : மெக்லரன்ஸ் ஷிப்பிங் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 66843
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 22, சனவரி 2009
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 284, வொக்சோல் வீதி, கொழும்பு 02

சபையின் கட்டளைக்கிணங்க,

மெக்லரன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2-422/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க ஒரு கம்பனி கீழ் குறிப்பிடப்படும் பெயர், முகவரியின் கீழ் கம்பனிகள் பதிவாளர் அதிபதியினால் பதிவுசெய்யப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவிக்கின்றது :

கம்பனியின் பெயர் : மெக்லரன்ஸ் ஷிப்பிங் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : ஏ. 66799
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 16, சனவரி 2009
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 284, வொக்சோல் வீதி, கொழும்பு 02

சபையின் கட்டளைக்கிணங்க,

மெக்லரன்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2-422/2

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க 9 ஆம் கம்பனிகள் சட்டத்தின் பிரிவின் விதிகளுக்கமைவாக ஓர் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியை கூட்டிணைப்பதற்கான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : லெஷர் கார்கோ (பிறைவேட்), லிமிட்டட்
பதிவு இலக்கம் : பி. வி. 66564
பதிவு விலாசம் : 260, ஸ்ரீ ராமநாதன் மாவத்தை, கொழும்பு 15.

பணிப்பாளர்கள்.

2-428

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 பிரிவிக்கமைய பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்

கம்பனியின் பெயர் : பேம் ஸ்மைல்ஸ் (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 66481
திகதி : 2008, திசெம்பர் 11
கம்பனியின் விலாசம் : இல. 52, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு 7.

நெக்ஸியா கோர்பறேட்
கன்சல்டன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2-385/1

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய கீழே குறிப்பிடப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : நவர கெப்பிட்டல் (பிறைவேட்), லிமிட்டட்

கம்பனியின் இலக்கம் : பி. வி. 66661

திகதி : 2008, திசெம்பர் 31

பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 400/60/7, லோங்டன் அவெனியு, கொழும்பு 7.

நெக்ஸியா கோர்பறேட்
கன்சல்டன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2-385/2

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஓர் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனியின் கூட்டிணைப்பதற்கான பகிரங்க அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : நவர பிளான்டேஷன்ஸ் (பிறைவேட்), லிமிட்டட்

கம்பனியின் இலக்கம் : பி. வி. 66662

திகதி : 2008, திசெம்பர் 31

கம்பனியின் முகவரி : இல. 400/60/7, லோங்டன் அவெனியு, கொழும்பு 07.

நெக்ஸியா கோர்பறேட்
கன்சல்டன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2-385/3

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய ஓர் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனியின் கூட்டிணைப்பதற்கான பொது அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : மெகா ரென் பயோஎனர்ஜி (பிறைவேட்), லிமிட்டட்

கம்பனியின் இலக்கம் : பி. வி. 65901

திகதி : 2008, ஒற்றோபர் 17

கம்பனியின் முகவரி : 620, கோட்டே வீதி, ராஜகிரிய

நெக்ஸியா கோர்பறேட்
கன்சல்டன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்.

2-385/4

B 4 - B 079986

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய கீழ்க்குறிப்பிட்டவற்றை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகிறோம் :

கம்பனியின் பெயர் : றொபேஸ்ரா (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 66801
திகதி : 2009, சனவரி 16.
கம்பனியின் முகவரி : 69, ஜயலத் பில்டிங், 3மஹல, நவ கெலனி பாலம வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிட்டிய
கம்பனியின் பெயர் : ஜி. சி. எம். (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பி. வி. 66807
திகதி : 19. 01. 2009
முகவரி : 421, ராஜகிரிய வீதி, ராஜகிரிய

எக்கவுண்டன்சி அன்ட் செக்ரெட்டேரியல்
சேர்விசஸ் பியுரோ லிமிட்டெட்
செயலாளர்கள்.

86, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
ஹொஹுவல, நுகேகொடை.
2009 பெப்புருவரி 03.

2-445

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (I) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : சைனெக்ஸ் லங்கா (பிறைவேட்), லிமிட்டட்

கம்பனியின் இலக்கம் : பி. வி. 66817

பதிவு செய்யப்பட்ட
அலுவலக விலாசம் : 24ஏ, மல்வத்த அவனியு, கொஹுவளை, நுகேகொடை

கம்பனிச் செயலாளர்கள்.

2-471

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவிற்கமைய கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனம் கூட்டு நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகிறோம் :

கம்பனியின் பெயர் : சீலோன் டீ புஸ் (பிறைவேட்), லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பி. வி. 66923
கம்பனியின் முகவரி : இல. 95/16, ராஜகிரிய வீதி, ராஜகிரிய
பதிவு செய்யப்பட்ட திகதி : 2009, சனவரி 30.

கோர்ப்பரெட் அட்வைசரி
சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட்
நிறுவன செயலாளர்கள்.

2-484

**அட்டோர்ணித் தத்வத்தை இல்லாதொழித்தல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, பதுளை மாவட்டம், ஹப்புத்தளை, இதல்கஸ்ஹின்ன கட்டுவெகமவைச் சேர்ந்த ஹிட்டி ஹாமி, முதியன்சேலாகே ரஞ்சித் பிரேமதாச ஆகிய நான், மேற் சொல்லப்பட்ட இலங்கை குடியரசு, பதுளை மாவட்டம், ஹப்புத்தளை, இதல்கஸ்ஹின்ன, கட்டுவெகமவைச் சேர்ந்த ஹேவா வித்தாரண லாகே கருணாவதி என்பவருக்கு வழங்கிய பண்டாரவளை யைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சஞ்ஜீவ நிஷான் விஜேசேக்கர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008, செத்தெம்பர் 27 திகதியிடப்பட்ட 176 ஆம் இலக்க விசேட அட்டோர்ணித் தத்துவத்தை செயலற்றதாக்கி இல்லாதொழிக்கின்றேன் என இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் ஏனையோருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சொல்லப்பட்ட விசேட அட்டோர்ணித் தத்துவத்தின் மூலம் மேற்குறிப் பிடப்பட்ட அட்டோர்ணித் தத்துவக்காரரால் இதன்பின்னர் ஆற்றப்படும் எவ்வித செயல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் எவ்வித பொறுப்பும் ஏற்கமாட்டேன் எனவும் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹிட்டிஹாமி முதியன்சேலாகே,
ரஞ்சித் பிரேமதாச.

2-408

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய, "டீஎப்சிசி ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்" என்ற நிறுவனம் "எக்குயிட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்" என 2009 சனவரி 08 ஆந் திகதி கம்பனி பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழுக்கு அமைய மாற்றப்பட்டுள்ளது :*

*கம்பனியின் முன்னைய பெயர் :* டீஎப்சிசி ஸ்டொக் புரோக்கர்ஸ் (பிறைவேட்), லிமிட்டட்

*கம்பனியின் இலக்கம் : பி. வி. 3310*

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 216, டிசேரம் பிளேஸ், கொழும்பு 10*

*கம்பனியின் புதிய பெயர் :* எக்குயிட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிறை வேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப்பிரகாரம்,

கோர்ப்பரெட் சேர்விசஸ் லிமிட்டெட்,
(எக்குயிட்டி ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிறைவேட்), லிமிட்டட்)
செயலாளர்கள்.

2-482

# ஏல விற்பனைகள்

**டீஎவ்சீசீ வங்கி**

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**24557 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் A. C. L. G. அத்துகோரள அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட 2822 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு C1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கினிகொட கோரளே, தியலடஹமுன பத்து, பள்ளே கரண்டுபொனே என்னும் இடத்தில் அமைந்துள்ள தஹ்கஹபெல என அழைக்கப்படும் காணி.**

**(காணியின் விஸ்தீரணம் . 0ஏ. 0 றூ. 38.05. பே.) அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக**

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு R. M. A. N. W. ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதியிடப்பட்ட, 24557 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் நெலுந்தெனியவில் உள்ள லக்தீபானி குமாரி பெஷன்ஸ் எனும் நிறுவனத்தின் உரிமையாளரான நெலுந்தெனியவைச் சேர்ந்த லேக்கமாலாகே தீபா ராணி வருசப்பெரும என்பவரால் டிஎவ்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து )*

டிஎவ்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையின் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரரின் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவான ரூ. 33,350 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ.2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்படவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு : 011- 2440366/77 எனும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎவ்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ஐஎஸ்ஓ 9001 : 2000
தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி
பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு
ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி. | இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 011-2502680, 2585408 |
| தொ./ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme. com

2- 431

---

## தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

### தேசிய சேமிப்பு வங்கிக்கு சொந்தமான பெறுமதிமிக்க ஆதனத்தின் ஏல விற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோறளை அதிகாரிபற்றுவின் முல்லேரியாவ யுனிட் கொட்டிகாவத்தயின், முல்லேரியாவ பிரதேசசபை எல்லைக்குட்பட்ட ஹிம்புட்டானவில் அமைந்துள்ள "கொஸ்கஹவத்த" என அழைக்கப்படுவதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டி. சரத் இரட்ணாயக்காவினால் ஆக்கப்பெற்ற 1999 அக்டோபர் 28 ஆந் திகதியிட்ட 3088 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 46 என அடையாளமிடப்பட்டதுமான 20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க காணித் துண்டின் ஏல விற்பனை**

*(இல. 8/6, விஜய வீதி, கொலன்னாவையைச் சேர்ந்த திரு. ஜகத் மெதவத்தகே, திருமதி மோதறகே துசாரி அப்சரா ஆகியவர்களால் இவ்வாதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளது.)*

**ஆதனத்தின் விபரம்.**- மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை அதிகாரிபற்றுவின் கொட்டிகாவத்த யுனிட், கொட்டி காவத்த, முல்லேரியாவ பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முல்லேரி யாவில் அமைந்துள்ள "கொஸ்கஹவத்த என அழைக்கப்படும் காணியும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாகவும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டி. சரத் இரட்ணாயக்காவினால் ஆக்கப்பெற்ற 1999 அக்டோபர் 28 ஆந் திகதியிடப்பட்ட 3088 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 46 என அடையாளமிடப்பட்டதும் ; வடக்கில் : 573ஏ இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டுகள் 43ஐயும், 44ஐயும், ; கிழக்கில் : 573ஏ இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 45 ஐயும் ; தெற்கில் : துண்டு 32 (15 அடி அகல பாதை) ஐயும் ; மேற்கில் : 573ஏ இலக்க வரைபடத்திற்கமைய துண்டு 47 ஐயும் எல்லைகளாகக் காட்டுவதும் சொல்லப்பட்ட 3088 ஆம் இலக்க வரைபடத்திற்கமைவாக இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே) விஸ்தீரணம் கொண்டதுமான துண்டு 46 என பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட காணி, கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீள் அளவீடாகும்.

மேலே சொல்லப்பட்ட முல்லேரியாவில் அமைந்துள்ள, கொஸ் கஹவத்த என அழைக்கப்படும் காணியும், உத்தரவு பெற்ற நிலஅளவை யாளர் என். டி. சிறிசேனாவினால் ஆக்கப்பட்ட 1964 மார்ச் 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 573ஏ வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 46 என அடையாளமிடப்பட்ட காணியும் ; வடக்கில் : துண்டுகள் 43ஐயும் 44 ஐயும் ; கிழக்கில் : துண்டு 45ஐயும் ; தெற்கில் : துண்டு 32 (பாதை ஒதுக்கு) ஐயும் ; மேற்கில் : துண்டு 47ஐயும் எல்லைகளாகக் கொண்டதும், சொல்லப்பட்ட 573ஏ இல. வரைபடத்திற்கமைய, இருபது பேர்ச்சர்ஸ் (0ஏ. 0றூ. 20பே) விஸ்தீரணமுள்ளதும் கொழும்பு காணிப்பதிவகத்தில் எல் 32/217 கோவையில் பதிவு செய்யப்பட்டதும், தற்போது எல் 51/45 கோவையில் பதியப்பட்டுள்ளதுமான துண்டு 46 எனும் பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும் 573ஏ இல. வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 32 இன் மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதை உரித்து உள்ளடங்கலாகவும்.

**ஆதனத்திற்கு செல்லும் வழி.**- அங்கொட பஸ்நிலையத்திலிருந்து ஹிம்புடான வீதியில் 200 மீற்றர் வரையிலும் சிறிமாவோ பண்டாரநாயக்க நூலகம் வரை செல்லவும். வலது பக்கம் ஹிம்புட்டான ஒழுங்கையின் திரும்பி மேலும் 250 மீற்றர் செல்லவும் . பின்னர் வலது பக்கம் திரும்பி 1 வது குறுக்கு ஒழுங்கையில் 300 மீற்றர் சென்று இடது பக்கமுள்ள ஆதனத்தை அடையவும்.

இவ்வாதனம், பகிரங்க ஏல மூலம் 2009, மாச்சு 06 ஆந் திகதி (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தைப் பெற்ற கொள்வனவுக் காரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் கொடுப்பனவுகளை காசாகக் கொடுக்க வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% ;
(2) பிரதேச சபைக்கு வரியாகக் கொள்வனவு விலையின் 1% ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவாக ரூ. 83,873 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைக் கட்டணம் ரூ.750.

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனைத் தேதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர் :-

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 03,

தொலைபேசி : 011 - 2576132

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அங்கீகரிக்கப்பட்ட முன்னணி பட்டய
ஏலதாரர்களும் இலங்கையில்
உள்ள அனைத்து வங்கிகளினதும்
மதிப்பீட்டாளர்களும்.

| தலைமை அலுவலகமும் காட்சி அறைகளும் : | நகர அலுவலகம் : |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, | இல. 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி. | கொழும்பு 05. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல.: 011-2502680, |
| 081-2224371 | 2585408 |
| தொ./ ஃபெக்ஸ் : 081-2224371 | தொ./ ஃபெக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : Sameera @diamond.lanka. net | மின்-அஞ்சல்:Sameera@Srilanka.net |

2- 453

---

## றுஹுன அபிவிருத்தி வங்கி - மாவரல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள் ஏல விற்பனை

றுஹுன அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2009.03.09 ஆந் திகதி மு. ப. 11.00 க்கு இங்கு கீழ் கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் அவை அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்**.- தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே கந்தபொட பத்துவையில் தேவாலகம, வெவுலபியத்த இரு கிராமங்களுக்கமைய அமைந்துள்ள லாவல்லஹேன அல்லது தெல்கஹஹேனயில் இல. 01 என்ற துண்டினால் பகிர்ந்த இல. 1ஏ துண்டும் பல்லியகொன்தே தெனிய அல்லது பைஸெவெவகொரடுவ காணியால் வேறுபடுத்திய இல. 17 எனும் இருபது பர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் உட்பட லொட் இல. 50 கொண்ட பிரயாணஞ்செய்யக்கூடிய உரிமையைக் கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2008.10.24 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும் 2008.12.03 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏல விற்பனைப் பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- தெய்யந்தர ரதாவெல பாதையில் பொரலுபல சந்தியிலிருந்து இடப்பக்கமாக செல்கின்ற பாதையில் 150 மீற்றர் செல்ல தென்படும் முச்சந்தியிலிருந்து வலப்பக்கமாக செல்கின்ற கொன்கிரிட் பாதையில் அமைந்துள்ள முதலாவது காணியாகும்.

**செலுத்தும் முறை** .- வெற்றி பெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ் கண்ட படி பணமாக செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையின் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையின் 2 1/2%;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும் வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 75% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரன, அனகாரிக தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382ஏ எனும் நிலையத்திலுள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தில் முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு. உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முக வரியில் பெறலாம்.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

குருந்துவத்த,
வல்கம, மாத்தறை.
தொலைபேசி இல. : 041 - 2228731, 071-4438516

2-435

திருத்தம்

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதிய 1586 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் "பகுதி I : தொகுதி (II ஆ) ஏல விற்பனைகள்" பகுதியின் கீழ் 653/6 ஆம் இலக்க அறிவித்தலில்" -*

**தீர்மான அறிவித்தலுக்கு** .- 02. 01. 2009 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 03. 01. 2009 ஆந் திகதிய "டெய்லிநியூஸ்", "லக்பிம" மற்றும் 09.01.2009 ஆந் திகதிய "சுடர் ஒளி", ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும் என்பதற்கு பதிலாக, "**தீர்மான அறிவித்தலுக்கு**.- 02. 01. 2009 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியை யும் 03. 01. 2009 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் 02. 01. 2009 ஆந் திகதிய "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும் என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

இரஞ்சித்த எஸ். மஹநாம,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.

தொலைபேசி இல. 2863121

2 - 533

---

### தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான ஏல விற்பனை*

*2009, பெப்புருவரி 06 ஆந் திகதிய 1588 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 2009, பெப்புருவரி 27 ஆந் திகதிய நடைபெற திட்டமிடப்பட்டிருந்த, வாதுவ, மொல்லிகொடயில் அமைந்துள்ள "கிரிபெல்லகஹவத்த" என்றும் "கொடபரகஹவத்த" என்றும் அழைக்கப்படுவதும் அறியப்படுவதும், உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. என். எம். ஆர். பிரேமரட்ணவினால் ஆக்கப்பட்ட 1993, பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட 205 ஆம் இலக்க அளவீட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 8 என அடையாளமிடப்பட்டதுமான ஆதனத்தின் ஏல விற்பனை இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதை, இத்தால் பொதுமக்களின் தகவலுக்காக அறியத்தரப்படுகின்றது.*

உதவி பொது முகாமையாளர் - கடன்,
(கடன் பிரிவு).

தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 03

2 - 452

---

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவு பிரிவினுள், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, ராகம்பற்று, கட்டானை பிரதேச சபையின் ரத்தொளுவ உப அலுவலக எல்லைகளுக்குள், தம்பதுரேயில் அமைந்துள்ளதும் 'போகஹவத்த' மற்றும் 'கல்ல' என அழைக்கப் படும் காணியின் உத் தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஈ. ஜே. பி. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005, செத்தெம்பர் 6 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 8691 இல் குறிப்பிடப்பட்ட காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை.***

***(காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் ( 0ஏ. 1றூ. 0 பே.)***

***நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பி 199/104 இல் பதிவு செய்யப் பட்டுள்ளது.***

*(வெத சுரங்க டீ சில்வா, நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். எல். ஜீ. கூரே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008, ஏப்பிறல் 22 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5977, 2006 ஓகத்து 1 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 5701 மற்றும் 2006, சனவரி 17 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 5613 ஆகிய எல்லாவற்றினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்).*

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இனால் எனக்கு அளிக் கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, மாச்சு 26 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2009.02.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்த மானியையும் 2009.02.17 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- தம்பதுரே பாலத்திலிருந்து உடமிட்ட வீதிக்கு இடப்பக்கம் திரும்பி இவ்வீதி வழியே சென்று மயான சந்தியில் கல்லேவத்தவிற்கு இடப்பக்கம் திரும்பி, இவ்வீதி வழியே ஏறக்குறைய 200 யார் செல்ல வீதியை எல்லையாகக் கொண்டு வலப்பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- பின்வரும் தொகைகளை காசாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் 1% (ஒரு வீதம்) மற்றும் பெ. சே. வ. கட்டணங்கள் ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;

(4) மொத்த விற்பனை செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3. காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர் - சட்டசம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

இரஞ்சித்த எஸ். மஹாநாம
(தீவு முழுவதிற்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

2- 451/2

---

## பேன் ஏஷியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவினுள், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, துனகஹபற்று கிம்புலபிட்டியில் அமைந்துள்ளதும் 'கதுருகஹ வத்துபெல்ல கதுருகஹவத்த என்ற முனமல்கஹவத்த கதுருகஹவத்த என்ற கிரினு கஹவத்த பலுகஹலந்த கதுருகஹவத்த கோன்கஹவத்த மற்றும் தெல் கஹவத்த மற்றும் கதுருகஹவத்த' என அழைக்கப்பட்ட காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006.06.03 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 5610/1 இல் குறிப்பிடப்பட்ட காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை.**

(காணியின் விஸ்தீரணம் : ஒரு ஏக்கர் மூன்று றூட் இரண்டு தசம் ஐந்து ஐந்து) ( 1ஏ. 3றூ. 2.55 பே.)

*(கச்ச கடுகே பிரசாந்த அன்ரன் பெர்னாண்டோ, நீர்கொழும்பை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஐ. கொட்பிரே கூரே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, திசெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5911, 2007, மே 29 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5839 மற்றும் 2006, நவெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 5747 ஆகிய எல்லாவற்றினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்).*

பேன் ஏஷிய வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, மாச்சு 27 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2009.02.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.02.19 ஆந் திகதிய " டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கிம்புலபிட்டி றோமன் கத்தோலிக்க தேவாலயத்திலிருந்து கிம்புலபிட்டி - டகொன்ன வீதி வழியே ஏறக்குறைய 1/2 மைல் வரை செல்ல வீதியை எல்லையாகக் கொண்டு வலப்பக்கத்தில் சொல்லப்பட்ட இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் ஏலதாரருக்கு பின்வரும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் மிகுதி 1% (ஒரு வீதம்) மற்றும் அதே போன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை) ;
(4) மொத்த விற்பனை செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;

கொள்வனவு விலையின் 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3. காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர் - சட்டசம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

இரஞ்சித்த எஸ். மஹநாம,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

2- 451/1

**பான் ஏஷியா வங்கிக் கூட்டுத்தாபனம்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, றாகம்பற்று, வத்தளை மாபோலை நகர சபை எல்லைகளுக்குள், வத்தளை, கொழும்பு வீதி வழியே அமைந்துள்ளதும் கொழும்பு வீதி,வரிமதிப்பு இல. 190 ஐக் தற்போது கொண்டதும்'சுதுவேகும்புற' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மற்றும் மட்டமாக்குநர் எம். டி. ஜே. வீ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999.11.30 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 16710 இல் குறிப்பிடப்பட்டு துண்டுவை என அடையாள மிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.**

**காணியின் விஸ்தீரணம் : சைவர் ஆறு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் 0ஏ. 0றூ. 06.75 பே.**

**கொழும்பு காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் பி 864/42 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

*(உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஹக் ஆர் சமரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1993, ஏப்பிறல் 7 ஆந் திகதியிடப்பட்ட சொல்லப்பட்ட வரைபடம் இல. 1764 இல் துண்டு 3 மற்றும் துண்டு 2 என அடையாளமிடப்பட்டுள்ள பாதை ஒதுக்குகளின் மீதும் வழியேயுமான முழுமையான மற்றும் சுதந்திரமான வழியுரிமை மற்றும் வேறு உரிமைகளுடன் சேர்த்து.*

**ஏலவிற்பனை**

*(ஹீத்தக்கே லன்ரி கமில்ரன் சில்வா, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப் பட்டு 2007.06.14 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2363 மற்றும் 2004.7.19 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1364 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்).*

பேன் ஏசிய வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009, மாச்சு 26 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *2009.02.20 ஆந் திகதிய அரசாங்கம் வர்த்த மானியையும் 2009.02.18 ஆந் திகதி "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10%;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% (ஒரு வீதம்) மற்றும் அதே போன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5%;

(4) மொத்த விற்பனை செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும், "கொழும்பு 3. காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர் - சட்டசம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

இரஞ்சித்த எஸ். மஹாநாம,
(தீவு முழுவதிற்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

2- 451/3

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - மருதானை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, பியகம பிரதேச சபையின் மாக்கொலை உப அலுவலக எலல்லகளுக்குள் ஹெய்யன்துடுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் குணசேக்கர வீதி, வரிமதிப்பு இல. 26/1 ஐ தற்போது கொண்டதும் "நாகஹலந்த" என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். என். பெர்ணான்டோ வினால் தயாரிக்கப் பட்டு 2001, செத்தெம்பர் 12 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1000 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்)**

**ஏல விற்பனை**
**காணியின் விஸ்தீரணம் :15 பேர்ச்சுகள் )**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு யு. எஸ். கே. ஹேரத் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, மே 26 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1620 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவரான மொஹமட் கலீல் மொஹமட் ரம்ஸியினால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்கு ஈடுவைக் கப்பட்டுள்ள ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009 மார்ச்சு

*12 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *2008.10.19 ஆந் திகதிய அரசாங்கம் வர்த்த மானியையும் 2008.11.06ஆந் திகதி " ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.***- *கிரிபத்கொடை சந்தியிலிருந்து கண்டி வீதி வழியே சென்று 04.07. கி. மீ. தூரத்தில் பியகமவிற்கு இட்டுச் செல்லும் வீதிக்கு வலப்பக்கம் திரும்பி ''மெய்வினட்டி லங்கா'' வளவுகளின் பக்கமாக வலப்பக்கம் திரும்பி செல்ல நான்கு சந்திகளைக்கொண்ட 50 மீற்றர் தூரத்தில் டெட்ஸ்ரார் (Tedstar) தொழிற்சாலைக்கு எதிரே குணசேக்கர வீதியை நோக்கி இச்சந்திக்கு எதிர் புறத்தில் இவ்வாதனம் இருக்கிறது.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றி பெறும் கொள்வனவாளர், ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள்

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கிக்கு பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

கொள்வனவு விலையின் எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 % (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும், ''கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, எச். என். பி. கோபுரங்கள்'' ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர் (அறவீடுகள்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இரஞ்சித்த எஸ். மஹாநாம,
(தீவு முழுவதிற்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

''ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்'',
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

2- 451/5

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - பதுளை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பதுளை மாநகர சபை எல்லைகளுக்குள் அளுத்வெலகமவில் அமைந்துள்ளதும் ரத்வத்தே மாவத்தை, வரிமதிப்பு இல. 11/7 சீ ஐக் கொண்டதும் ''கல்பொத்த கும்புற மற்றும் மஹப்பத்தி ராஜகும்புற'' என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எவ். இஸ்மயில் அவர்களால் தயாரிக்கப்பட்டு, 1985 மார்ச்சு 25 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2422 இல் குறிப்பிடப்பட்டு, துண்டு 5 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 20 பேர்ச்சுகள் )**

*(பதுளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஹரித்த ராஜபக்ஷ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, சனவரி 21 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 653 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவரான மொஹமட் ஹமீம் மொஹமட் ரிஸ்வானினால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2009 மார்ச்சு 9 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2008.11.28 ஆந் திகதிய அரசாங்கம் வர்த்த மானியையும் 2008.12.16ஆந் திகதி " ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- பதுளை பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து மஹியங்கனை வீதி வழியே கைலகொடை சந்தி வரை ஏறக்குறைய 1 கி. மீ. சென்று பண்டாரநாயக்க மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி, ரத்வத்த மாவத்தை சந்திவரை ஏறக்குறைய 100 மீ சென்று ரத்வத்தை மாவத்தைக்கு வலப்பக்கம் திரும்பி இவ்வீதி வழியே ஏறக்குறைய 65 மீற்றர் சென்று வித்தியால ஒழுங்கைக்கு இடப்பக்கம் திரும்பி மேலும் ஏறக்குறைய 100 மீற்றர் செல்லவும். அவ்விடம் உட்பிரவேசிக்கும் வீதிக்கு இடப்பக்கம் திரும்புகிறது. ஏறக்குறைய 35 மீற்றர் சென்று விற்பனைக்குரிய ஆதனத்தை அடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றி பெறும் கொள்வனவாளர், ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;

(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(6) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள்

கொள்வனவு விலையின் 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

கொள்வனவு விலையின் எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 % (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகார முண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும், "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, எச். என். பி. கோபுரங்கள்" ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, சிரேட்ட முகாமையாளர் (அறவீடுகள்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 2661826

இரஞ்சித்த எஸ். மஹாநாம,
(தீவு முழுவதிற்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹநாம டிரைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

2- 451/4